# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

------------

## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, PERAMBALUR

| | | |
|---|---|---|
| Case Number | : | C.C.NO. 86/2024 |
| Prosecution Witness | : | **அ.சா.**2 |
| Name | : | **அழகேசன்** |
| Husband Name | : | ராமசாமி |
| Address | : | பெரம்பலூர் |
| Age | : | 53/2025 |

**தேதி : 16.04.2025**

சாட்சிக்கு நீதிமன்ற உதவியாளர் திரு.S. தினேஷ் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் பெரம்பலூர் நான்கு ரோட்டில் வசித்து வருகிறேன். அ.சா.1 ஐ தெரியும். கடந்த 11.11.2023 அன்று மாலை 6.00 மணி முதல் 7.00 மணி இருக்கும் அ.சா.1 பேருந்திலிருந்து இறங்கி வரும்போது ஒரு பையன் அவருடைய கழுத்தில் இருந்த செயினை அறுத்துக்கொண்டு ஓடிவிட்டதாக சொன்னார். நாங்கள் சென்று தேடிபார்த்தோம். போலீஸார் அங்கு வந்தார்கள். என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். என்னுடன் மற்றொரு பையன் கையெழுத்து போட்டான். அரியலூர் ் ரோட்டிலுள்ள சுவராஜ் ட்ராக்டர் கம்பெனி அருகில் போலீஸார் விசாரித்தபோது கையெழுத்து போட்டேன். போலீஸார் படம் வரைந்தார்கள். **பார்வை மகசர் அ.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

12.11.2023 அன்று காலை 9 மணியிலிருந்து 10 மணிக்குள் கையெழுத்து போட்டேன். போலீஸார் என்னை விசாரித்தபோது என்னுடன் கையெழுத்து போட்டவரின் பெயரை நான் சொல்லவில்லை. போலீஸார் என்னை விசாரித்தபோது முதல் விசாரணையில் சொன்ன விவரத்தைதான் சொன்னேன் என்றால் சரிதான். நான் காவல்நிலையத்தில்தான் கையெழுத்து போட்டேன் என்றாலும், அ.சா.1 எனக்கு தெரிந்தவர் என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by / before me in open court
read over / interpreted to the witness
in the presence of the accused / accused/
pleader and admitted by the witness to be
correct

Sd/-.
Judicial Magistrate No.1
Perambalur.